https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# சங்க இலக்கியத்தில் போர்கருவிகளின் சிறப்புகள்

**மா. ஜெயலட்சுமி**
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி, தருமபுரி - 636 705

**முனைவர் சி. கணேசன்**
உதவிப்பேராசிரியர், ஆய்வு நெறியாளர்
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, தருமபுரி - 636 705

## முன்னுரை

*நாடோடிகளாக வாழ்ந்த மனிதன் நாகரீக வளர்ச்சியின் காரணமாக வீரத்தின் வழியில் எதையும் சாதிக்கமுடியும் என்பதனை அறிந்திருந்தனர். ஆரம்ப காலத்தி;ல் கிடைத்த உணவுகளை உண்டு வாழ்ந்தவன் பிறகு வேட்டையாடி உண்ணும் அளவிற்கு கற்றுக்கொண்டான். அதற்காக கூர்மையான கல், மரம் போன்றவற்றை பயன்படுத்தி விலங்குகளை வேட்டையாடி உண்டான். காலமாற்றத்தின் காரணமாக உலோகங்களைக் கண்டுபிடித்து அவற்றில் கருவிகள் செய்து பயன்படுத்தலானான். விலங்குகள் மட்டுமல்லாமல் மற்ற மனிதர்களும் தன்னை கண்டு அஞ்சக்காரணம் தனது வீரமே என்பதை உணர்ந்த மனிதன் தனது வீரத்தை வளர்க்க ஆரம்பித்தான். அதற்காக பல கருவிகளைத் தயாரித்து அதனை செம்மையாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்தக் கற்றுக்கொண்டான்.*

## போர் கருவிகள்

*ஆரம்ப காலத்தில் கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு கிழங்கு, காய் வகைகளை பிடிங்கியும், பறித்தும் விலங்குகளை குத்தியும் கிழித்தும் உண்டு வந்தான். நாகரீக மாற்றத்தின் காரணமாகவும் உலோகம் கண்டுபிடிப்பதற்கு பிறகும் செம்பினால் ஆன கருவிகளை விட இரும்பு வலிமை மிக்க உலோகம் என அறிந்து அவற்றால் செய்யப்பட்ட கருவிகளை கொண்டு பிறரை தாக்கவும் தங்களை போர் தாக்குதலில் இருந்து பாதுகாக்கவும் பயன்படுத்தினர்.*

> “நெருழை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
> இரும்புடைப் பழவான் வைத்தன்னின்றி” - *புறம்.316:5-6.*

*என்று புறநானூற்று வரிகள் மூலம் தலைவன் ஒருவன் தன் வீட்டிற்கு வநத் விருந்தினர்க்கு விருந்து கொடுப்பதற்கு தன்னிடம் ஒன்றும் இல்லாத நிலையில் தன்னிடம் எஞ்சியிருந்த இரும்பால் செய்யப்பட்ட வாளை கொண்டு போய் ஈடு வைத்து அதன் மூலம் பெற்ற பொருளால் விருந்தினர்க்கு உணவு நல்கிய செய்தியை அறியமுடிகிறது.*

*தொல்காப்பியத்தில் சங்க இலக்கியத்திலும் அவற்றைத் தொடர்ந்த இலக்கியங்களில் போருக்கு பயன்படுத்தப்பட்ட கருவிகளாக முப்போர்க்கருவிகள் என்ற போர்க்கருவிகளான வாள், வில், வேல் ஆகிய மூன்று கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அடார், அரிவாள், எஃகம், நவியம், படைவான், மழு, வேலுறை, கவசம், கேடயம் போன்ற கருவிகளும் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.*

போர் - சொற்பொருள் விளக்கம்

'போர்' என்னும் 'பொரு' என்னும் வேர் சொல்லில் இருந்து தோன்றியதாகும். 'பொரு' அல்லது 'பொருவு' என்னும் வேர்சொல்லில் இருந்து தோன்;றியதாகும். 'பொரு' அல்லது 'பொருவு' எனில் ஒத்திருத்தல் என்பது பொருள். தமிழர்கள் அக்காலத்தே ஒத்த திறனும் ஒத்தபடைப்பும் உடையாரிடம் சண்டையிடுதலையே போர் எனக் கொண்டனர் என்பதற்கு அச்சொல்லே ஆதாரமாகும். பண்டைக்கால தமிழகத்தில் பல போர்கள் நடந்துள்ளன. இப்போர்கள் குறித்து 'போர் தொடுப்பதை அறிவிக்கும்' செய்தியாக ஆநிரை கவர்தலும், போரிடும் நாள் குறித்துப் போர் முரசடித்தலும், நோயார், முதலியோர் அனைவரும் இடம் விட்டுச் செல்க என அறிவித்தலும் கொலைக்குரிய போரிலும் தமிழர்கள் கொண்டிருந்த அறத்தையே காட்டுகிறது.

மனித இனவாழ்வில் போர் என்பது உயிரியல் தேவை. அஃது ஒழுக்கங்களை நெறிநிறுத்தி வகைப்படுத்தும் இன்றியமையாத கருவி என்பர் அறிஞர் பொன்கீர்த்தி.

அடார்

விலங்குகளை அகப்படுத்தும் கருவி பொதி அடார் எனப்படும் 'அடார்' என்பதற்கு புலி முதலியவைகளை அகப்படுத்தும் பொறியாகிய கல்லடார்' எனத தமிழ்மொழி அகராதி விளக்கம் தந்துள்ளது. புறநானூற்றில் குடபுலமையார் என்னும் புலவர் 'அடார்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். பெரிய புலியைப் பிடிக்கும் வேடன் அதற்காக அமைந்த பெரிய கல் அடார் பற்றிய குறிப்பை,

இரும்புலி வேட்டுவன் பொறி

அறிந்து மாட்டிய

பெருங்கல் அடாரும் போன்தட புறம்.19:5-6.

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இப் பாடலுக்கு உரை எழுதிய ஔவை து. துரை சாமிப்பிள்ளை அடார் என்பது கற்பாறை களில் இணைப்பாகும். மலைநாட்டவர் பாறைகள் நிறைந்த குன்றுப் பகுதியில் பொறி அமைத்து அதன் வாயிலில் கற்பலகையால் கதவமைத்து உள்ளே ஆடுக ளைக் கட்டி வைத்திருப்பர். அதனைத் தின்னவரும் புலி உள்ளே நுழைந்து ஆடுகளை தாக்கும்போது வாயில் கதவாகிய கற்பலனை விரைவாக தானே மூடிக் கொள்ளுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அடாரைப் புலிகளைப் பிடிப்பதற்காக மட்டுமின்றி மழை, வெயில், காற்று போன்ற சமயங்களில் வேட்டுவர்கள் மறைந்திருப்பத ற்கும் பயன்படுத்தியுள்ளதாக விளக்கம் தந்துள்ளார். இதன் மூலம் வேட்டையாடும் பொழுது வேடன் பயன்படுத்தும் கருவியாக அடார் இருந்தமையை அறியமுடிகிறது.

வாள்

பழந்தமிழர்கள் தாங்கள் பயிரிட்ட பயிர்களின் விளைந்த பயிர்களை அறுவடை செய்வதற்காக ஒருவகை கருவியைப் பயன் படுத்தியுள்ளனர்; இக்கருவியே அரிவாய் எனப்படும். அரிவாள் என்பதற்கு, அகராதி யில் 'கொய்யுமாயுதம் மற்றும் ஈர்வாள்' என்றும், அருஞ்சொல்லகராதியில் 'நெற்கதிர் கள் முதலியவை அரியும் பிடிக்கும் கத்தி' என்றும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளன.

அரிவாள் ஆமையின் முதுகு போன்று வளைந்த வடிவமுடையதை,

"நெல்அரி தொழுவர் கூர்வாள்

மழுங்கின்

பிள்ளை மறத்தோடு அரிய

கல்செத்து

அள்ளல் யாமைக் கூன்புறத்து

உரிஞ்சும்" புறம்.379:3-5.

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இந்த அரிவாள் நெல் அறுவடை செய்வதற்கும், பழங்களை அறுப்பதற்கும் பசுக்களின் பசியைப் போக்கும் புல் மற்றும் இலை, தழைகளை அறுப்பதற்கும் பயன்பட்ட மையை,

"அணில்வரிக் கொடுங்காய்

வாள் போழ்ங்கிட்ட" புறம்.246-4.

"பசித்த ஆயத்து பயன்நிரை

தருமார்

பூவாக் கோவலர் பூவுடன்

உதிரக்" புறம்.224:14-15.

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இவ்வாறாக புறநானூற்றுப் பாடல்கள் அரிவாளின் வடிவத்தை அதன் கூர்மை யினையும் எடுத்துரைக்கின்றன.

"அம்பு சென்று இறுத்து

அரும்புண் யானைத்

தும்புடைத் தடக்கை வாயொடு

துமித்து

நாஞ்சில் ஒப்ப நிலம்மிசைப்

புரள" புறம்.19:9-11.

என்ற பாடலடியான போர்க்களத்தில் அம்பு தைத்து யானைகளின் துதிக்கையும், வாள் துண்டாகி வீழ்ந்த காட்சியை நிலத்தை உழும் கலப்பைக்கு ஒப்புமைப்படுத்தியுள்ளனர்.

## சேறுகுத்தி

புறநானூற்றில் சேறுகுத்தி என்னும் கருவி "தளம்பு" என்ற சொல்லால் குறிக்கப் பட்டுள்ளது. அதாவது சேற்றினைக் குழப்பி கட்டிகளை உடைத்து செம்மை செய்யும் கருவியாகும. சேற்றினைக் குழப்பிக் கட்டி களை உடைக்க செல்லுங்கால் சேற்றில் கிடக்கும் வாளைமீன் அக்கருவியின் இடையே விழுந்து அறுபட்டு துண்டாகி விடும் என்பதை,

"மலங்கு மிளிர் செறுவின்

தளம்புதடிந்து இட்ட

பழன வாளைப் பரூஉக்கண்

துணியல்" புறம்.613-4.

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

சோழன் நலங்கிள்ளியின் மகன் சேட் சென்னியின் நாட்டு இயல்பைப் பற்றி கூறும்போது தளம்பு என்ற கருவி இடம் பெற்றுள்ளது.

## கரும்பின் எந்திரம்

தற்காலத்தில் கரும்பின் எந்திரம் என்பது கருவி சாறு பிழியும் எந்திரத்தைக் குறிக்கும். ஆனால், கரும்பின் எந்திரம் என்பதற்கு கரும்பை ஆட்டும் ஆலை என புறநானூற்றுப் பாடலில் பழைய உரையில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

"மன்றில் பாயும் வன்புலத்

த்துவே

கரும்பின் எந்திரம் சீலைப்பின்

அயல" புறம்.32:5-6.

என வெள்வேல் வீரனொருவனின் நாட்டு வளத்தைப் பற்றிப் பாடும்போது ஆவுர்கீழார் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர்.

## வில்

பண்டைக்கால போர்களில் அனைத்து வகைக் கருவிகளும் முதன்மையாக விளங்கியது. வில்லென்றும் போர் கருவியே ஆகும். மன்னன் பெரும்பாலும் விற்படை, வேற்படை, வாட்படை, மற்படை முதலிய நால்வகைப் படைகளைப் பெற்றிருந்தான். பண்டைக் காலத் தமிழர்கள் விற்கலையில் முதன்மை பெற்றிருந்தனர். மன்னர்களுக்கு வில்வித்தை குலவித்தையாகவே இருந்தது. ஆகையால் சேரநாட்டு கொடியில் வில் வடிவமே சின்னமாக இருந்தது. இத்தகைய விற்படையில் கை தேர்ந்த வீரர்கள் விற்கலைஞர்கள் எனப் பெயர்பெற்றனர். ஆற்றுப்படை நூல்களில் வில்லின் பயன் பாட்டினைப் புலவர்கள் தம் வாழ்க்கை யோடு இணைத்துக் குறிப்பிடுகின்றனர். சுங்க சாவடிகள் நிறைந்த பெரிய வழிகளைப் பாதுகாக்க விற்படைகள் இருந்தன.

"கல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்

வில்லுடை வைப்பின் வியன்காட்டு

இயவின்" பெரும்.81-82.

சேரன் செங்குட்டுவன் தன்னுடைய வெற்றி க்கு அடையாளமாக வடஇமயத்தில் வில் இலச்சினையைப் பொறிந்ததை சிறுபாணா ற்றுப்படை குறிப்பிடுகின்றது.

"வடபுல இமயத்து, வாங்குவிற் பொறித்த

எழுவாழ் திண்தோள், இயல்தேர் குட்டுவன்"

சிறுபாண்.48-50.

## முடிவுரை

கருவிகள் சங்ககால மக்களின் வாழ்வில் எந்த அளவு இடம்பிடித்ததோ அதற்கு இணையாக போர்கருவிகளும் பங்கு பெற்ற மையையும் பற்றி அறிந்துகொண்டோம். விலங்குகளை அகப்படுத்தும் அடார் கருவி யும், சேற்றில் வாளைமீனை குத்தி எடுக்கும் கருவியும், அக்கால புறநானூற்றில் கரும்பின் எந்திரம் பயன்படுத்தப்பட்டது. ஆற்றுப்படை நூல்களில் வில்லின் தன்மையை பற்றியும் அறியப்படுகிறது என்பதனையும் இக் கட்டுரையின் மூலம் அறிந்து காண்டோம்.

## பார்வை நூல்கள்

1. புறநானூறு
2. சிறுபாணாற்றுப்படை
3. பெரும்பாணாற்றுப்படை.